# திருவருள் தரும்

# குரு





நசிகேதன்

ஸ்ரீ மதுரகாளி பதிப்பகம்

உ

ஓம் ஸ்ரீ குருபகவான் துணை

# ஸ்ரீ குருபகவான்



## ஸ்ரீ குருபகவான் துதி

மறைமிகு கலைநூல் வல்லோன்
 வானவர்க்கரசன் மந்திரி
நறைசொரி கற்பகப் பொன்
 நாட்டினுக்கதிபனாகி
நிறை தனம் சிவிகை மண்ணில்
 நீடு போகத்தை நல்கும்
இறைவன் குரு வியாழன் பொற்றாள்
 இணையடி போற்றி! போற்றி!!

- நவகோள் துதிகள்

# பொருளடக்கம்


1. நவக்கிரக வாதிமதம் எனும் நவகோள் வழிபாட்டுச் சமயம் ........................ 11
2. குரு என்பவர் யார்? ........................................................................ 14
3. குரு என்றால் என்ன பொருள்? ........................................................ 15
4. தேவகுரு வியாழ பகவானும் அசுரகுரு சுக்கிர பகவானும் ..................... 17
5. அசுர குருவையே வென்ற தேவகுருவின் பெருமை ............................... 19
6. சிவ குரு ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி என்ற சிவன் வேறு தேவகுரு ஸ்ரீ வியாழபகவான் என்ற கிரக தேவன் வேறு ........................ 21
7. விண்மீன் பூசமும் வியாழகுரு வழிபாடும் ........................................... 25
8. வானியல் விஞ்ஞானத்தில் வியாழ குரு ஜூபிடர் ................................ 26
9. குருவும் குரு சம்பந்தமான திருவிழாக்களும் ...................................... 30
10. குருவின் தொடர்பால் வரும் கும்பகோணம் மஹாமகமும் வட நாட்டுக் கும்பமேளாவும் ........................ 31
11. குருவின் தொடர்பால் வரும் சில யோகங்கள் ....................................... 35
12. குருபகவானுக்குப் பிரியமான குருப்பிரியா ராகம் ................................ 38
13. குருவாரமான வியாழக்கிழமையும் தினசரி வரும் குருஹோரையும் .......... 40
14. குருஹோரையின் தன்மைகள் ............................................................. 42
15. குருவின் திருவருளாய் பிறந்த குருமன்னனும் குருவம்ச மன்னர்கள் ஆண்ட குரு தேசமும் ........................ 43
16. திருக்கோயிலில் நவக்கிரஹ அமைப்பு முறையில் ஸ்ரீ குருபகவான் .......... 44
17. நவக்கிரஹங்களும், குருவும், வியாழக்கிழமையும், சிவனை பூஜித்த திருத்தலங்கள் ........................ 45
18. நவக்கிரஹங்களும், அதில் ஒருவரான குருவும் சிவனை வழிபட்ட திருக்கேதாரம் ........................ 47
19. நவக்கிரஹங்களும், குருவும் சிவனை வழிபட்ட திருமங்கலக்குடி சூரியனார் கோயில் ........................ 50
20. குருவும், வியாழக்கிழமையும் சிவனை வழிபட்ட திருத்தலம் திருக்கொண்டீஸ்வரம் ........................ 51
21. குருவும், வியாழக்கிழமையும் சிவனை வழிபட்ட திருத்தலம் பெருஞ்சேரி ... 53
22. குரு சிவனை வழிபட்ட திருத்தலம் மாக்குடி என்ற மாங்குடி .................. 54
23. வியாழன் எனும் கிழமை சிவனை வழிபட்ட திருத்தலம் கச்சி எனும் காஞ்சீபுரம் ........................ 55
24. வியாழன் எனும் கிழமை சிவனை வழிபட்ட திருத்தலம் திருக்கழுக்குன்றம் ........................ 57
25. குரு சிவனை வழிபட்ட திருத்தலம் வெங்குரு எனும் சீர்காழி .................. 61
26. குரு சிவனை வழிபட்ட திருவலிதாயம் என்ற பாடி ................................ 63
27. தேவகுரு சிவனை வழிபட்ட திருலாகி ................................................ 64
28. ஆழ்வார் நவ திருப்பதிகளில் ஒரு குருஸ்தலம் திருக்குளந்தை ................ 65

29. ஹநுமனுக்கு நவ வியாகரணங்கள் உபதேசித்தருளிய சூரியகுரு ............66
30. நான்கு முனிவர்களுக்கு ஞானோபதேசம்
செய்தருளிய ஸ்ரீ ஞானகுரு கணபதி ............69
31. காணாபத்யத்தில் குரு வழிபாடு
மஹா கணபதியின் சிரசில் வசிக்கும் குருபகவான் ............72
32. தேவர் முனிவர்களுக்கு உபதேசம் செய்தருளிய
சிவ குரு ஆலங்குடி ஸ்ரீ ஞான தக்ஷிணாமூர்த்தி ............74
33. திருவிடை மருதூர் ஸ்ரீ மஹாலிங்கேசருக்க ஆலங்குடி ஸ்தலம்
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தானமே ............79
34. மாணிக்க வாசகருக்கு உபதேசம் செய்தருளிய சிவகுரு ஸ்ரீ குருமூர்த்தி...80
35. வேதியர் ஆதிசைவர்களுக்கு வேத சிவாகமங்கள் போதித்த
சிவகுரு சிதம்பரம் ஸ்ரீ சதாசிவ மூர்த்தி ............82
36. தேவகுருவுக்கே உபதேசம் செய்தருளிய சிவகுரு
ஸ்ரீ தேவகுரு நாதேஸ்வரர் ............85
37. சுந்தரருக்கே உபதேசம் செய்தருளிய
சிவகுரு திருத்துறையூர் ஸ்ரீ சிஷ்ட குருநாதேஸ்வரர் ............87
38. குருசக்திகளாக விளங்கும் சரஸ்வதி, லக்ஷ்மி, மனோன்மணி ............89
39. விஷ்ணு அவதாரங்களில் குரு அம்சம் பொருந்திய சில தேவதைகள் ......92
40. ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு உபதேசம் செய்தருளிய
ராமகுரு ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி ............98
41. கீதோபதேசம் செய்தருளிய கிருஷ்ணகுருவும்
திருவல்லிகேணி ஸ்ரீ பார்த்தசாரதியும் ............100
42. குருவும், வாயுவும் பிரதிஷ்டை செய்து
வணங்கிய ஸ்ரீ குருவாயூரப்பன் ............104
43. தேவகுருவுக்காக தேரில் வந்தருளிய
திருமால் குருவித்துறை ஸ்ரீ சித்ர ரத வல்லபப் பெருமாள் ............107
44. சிவனுக்கே பிரணவ உபதேசம் செய்த ஸ்கந்தகுரு
ஸ்ரீ சுவாமிநாத ஸ்வாமி ............109
45. ஸ்கந்த குருவுக்கே ஆலோசனைகள் கூறிய
தேவகுரு திருச்செந்தூர் ஸ்ரீ வியாழ பகவான் ............112
46. குருவின் அம்சமுடன் அருளும் ஞானகுருசாமி
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் ............115
47. மனிதர்களுக்கு உபதேசம் செய்ய வந்த ஆஞ்சநேய குரு ............118
48. குருவாகவே விளங்கும் தேவர்களும்,
தேவதைகளும், ஆசாரிய புருஷர்களும் ............120
49. சப்தகுரு வந்தனம் ............125
50. வித்யா குரு பிரிவில் எண்வகை குருவினர் ............126
51. தேவகுருவை துதிக்கும் தியான மந்திரங்கள் ............128
52. குருபகவான் அருள் மந்திரங்கள், அர்ச்சனைகள் ............130
53. குருவை துதிக்கும் செந்தமிழ்த் துதிகள் ............136
54. ஸ்ரீ குருபகவான் மலர் வழிபாடு (108 போற்றி - தமிழ் அர்ச்சனை) .........140
55. குருமங்களம் ............143

1

# நவக்கிரஹ வாதி மதம் எனும் நவகோள் வழிபாட்டுச் சமயம்

பழங்காலத்தில் **நவக்கிரஹவாதி** மதம் என்றே ஒரு தனிச்சமயம் இருந்தது. இச்சமயத்தில் உள்ள மக்கள் நவக்கிரஹங்களே நம்மையாளும் தெய்வங்கள் என்றும், அவர்களுக்குமேல் இருந்து அதிகாரம் செய்யும் தெய்வங்கள் வேறேதும் இல்லை என்றும் நம்பினார்கள். (இது சற்று புதுமையான விஷயம்தான்). அதனால் **நவக்கிரஹங்களை** மட்டுமே பிரதான தெய்வங்களாக எண்ணி வணங்கி வழிபாடுகள் புரிந்தார்கள் அவர்கள். இவர்களின் வாதம் என்ன தெரியுமா?

நவக்கிரஹங்களாலேயே **சிருஷ்டி** எனும் **படைப்பும்;** ஸ்திதி எனும் **காத்தல் தொழிலும்; சம்ஹாரம்** எனும் **ஒடுக்குதல்** செயலும்; **திரோபவம்** எனும் **மறைத்தலும்; அனுக்கிரஹம்** எனும் அருளலும் நடைபெறுவதாக இவர்கள் கூறினார்கள். அவை நவக்கிரஹங்களின் **திசாபுக்தி, உச்சம், நீசம், நட்பு, ஆட்சி,** பகை, கவிப்பு, **பார்வை** இவற்றால் நடைபெறுகின்றன என்பது இவர்களின் வாதமாகும்.




கிரகங்களின் சேர்க்கை செயல்களால் ஜீவராசிகளுக்கு **ஜனனம்,** மரணம், சுகம், **துக்கம்,** தீர்க்க ஆயுள் அல்லது அற்ப ஆயுள் போன்றவற்றை தந்து அருள் புரிவதாகவும்; அதனால்தான் மக்கள் தாங்கள் பிறந்த நேரத்து ஜாதகங்களில் **என்** ஜாதக விசேஷம் என்றும், என் கிரகசாரம் என்றும்; **நான்** பிறந்த வேளை என்றும்; **என்**

நக்ஷத்திர பலன் என்றும், என் ராசிபலன் என்றும், பலவாறாக தங்கள் நிலையினை நொந்து கொள்கிறார்கள் என்பது இச்சமயவாதிகளின் குறிப்பாகும். இவையெல்லாம் ஓரளவு சரிதான். ஆனால் முழுவதும் சரியல்ல...

(கிரகங்கள் இறைவனின் தலைமையில் தான் இயங்குகின்றன என்ற தகவலை நீங்கள் எதிர்வரும் நவக்கிரஹங்களும் அதில் ஒருவரான குருவும் சிவனை வழிபட்ட திருக்கேதாரம் என்ற தலைப்பினுள் தெரிந்து கொள்ளலாம்.)

மும்மூர்த்திகளையுமே இந்த கிரகங்கள் பிடித்து ஆட்டிய செய்திகளை முன் வைத்துதான், இவர்கள் நவக்கிரஹங்களை தெய்வமாகவே எண்ணி வணங்குகிறார்கள். இவ்வழிபாட்டில் நவக்கிரகங்கள் ஒன்பதும் ஸ்வரூப நிலை என்றும்; இக்கிரகங்கள் நக்ஷத்திரங்கள், ராசிகள் முதலியவற்றுடன் கூடிய விரிகிறதே தடஸ்த நிலை என்றும்; இவைகளில் கட்டுப்பட்டு ஜனனம் மற்றும் மரணம் அடைவதே பந்தநிலை என்றும்; இந்த நவகோள்களையும் நவக்கிரஹ ஹோமங்கள் இயற்றி சாந்திசெய்தும்; கோயிலில் அவற்றிற்கு அபிஷேக ஆராதனைகள் புரிந்தும் அவற்றில் லயப்படுவதே ஜீவான்மாக்களுக்கு முக்தி நிலை என்பது இவர்களின் வாதமாகும்.

இவர்களுள்ளும் சூரியனை மட்டுமே வணங்கும் சூரியவாதி மதஸ்தர்களும் ஒரு பிரிவாக உள்ளனர். அவர்கள் சூர்யபகவானே உதயமாகும் காலையில் பிரம்மாவாகி உயிர்களை எழுப்பி படைத்தலையும்; உச்சிப்பொழுதில் விஷ்ணுவாகி மழை பொழிவித்து உணவு உற்பத்தி செய்து உயிர்களைக் காத்து நிர்வாகித்தலையும்; மறையும் சமயத்தில் மாலையில் ருத்திரனாகி ஜீவர்களை தம்முள் ஒடுக்கும் அழித்தல் செயலையும் செய்து மும்மூர்த்திகளின் அம்சமாக விளங்குவதாகவும் கூறுகிறார்கள். சூரிய மந்திரங்களை ஓதி தவமியற்றி சூரிய லோகத்தில் சென்று தங்குதலே ஆன்மாக்களுக்கு ஜீவன் முக்தி என்பது இவர்களின் கொள்கையாகும்.

இவர்களுள் சந்திரனை மட்டுமே வணங்கும் சந்திரவாதி மதஸ்தர்களும் இருந்திருக்கிறார்கள். இவர்களும் மேற்கண்டவாறே சந்திரதேவனை மும்மூர்த்திகளின் அம்சமாய்க்

கூறி; சந்திரமந்திரங்களை ஓதி, ஜீவான்மாக்கள் சந்திரலோகத்தை அடைவதே முக்தி என்றும் வாதித்தார்களாம். இதுபோலவே மற்ற எல்லா கிரகங்களுக்கும் விசேஷமான பக்தர்கள் உண்டு என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

நவகோள் வழிபாட்டுச் சமயத்தில் குருவை மட்டுமே வணங்கும் குருமதஸ்தர்களும் உள்ளனர். அவர்கள் குருவையே மும்மூர்த்திகளின் அம்சமாய்ப் போற்றுவர். குரு மந்திரங்களை ஓதி குருப்பெயர்ச்சி சாந்தியாகங்கள் செய்து குரு பரிஹாரங்களை இயற்றியும்; ஆலய வழிபாட்டில் குருவிற்கு அபிஷேக ஆராதனைகள் செய்தும்; குருஸ்தலங்களுக்கு சென்று குருவை வழிபட்டும்; குருவை மகிழ்வித்து நன்மைகள் பெறுபவர்கள் இந்த குரு பக்தர்கள். குரு மந்திர ஜபங்கள் செய்து, குருவின் உலகிற்கு சென்று தங்குதலே ஜீவான்மாக்களுக்கு முக்திநிலை என்பது குருபக்தர்களின் கருத்தாகும். எனவே குருவை வணங்கி குருவின் திருவருள் பெறுவோம். அவர் பார்வை பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வாங்கு வாழ்வோம்.

பின் குறிப்பு: மேற்கண்ட இக்கருத்துக்கள் அனைத்தும் தத்துவ நிஜானுபோதம் என்ற பழங்கால தத்துவ சாஸ்த்ர நூலில் இருந்ததாக; அபிதான சிந்தாமணி போன்ற சில கலைக்களஞ்சிய நூல்களில் குறிப்புகள் உள்ளன.

## குரு பகவானின் எண் மூன்று

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பார்கள். எனவே எண் கணிதப்படி குருபகவானின் எண் 3 ஆகும். அதுமட்டுமல்ல 12, 21, 30 ஆகிய எண்களும் குருவின் ஆதிக்கம் கொண்டவையே. 3 என்ற எண் பற்பல அபூர்வ தத்துவங்களை உள்ளடக்கியதாகும்.

மும்மூர்த்திகள், திரிசக்திகள், திரிசூலம், இறைவனின் முக்கண்கள், முக்காலம், முப்போதுகள், முக்குணங்கள் என்று மூன்று மூன்றாக பல விஷயங்கள் உள்ளன. எனவே எண் மூன்றும் இதுபோல அபார சக்திகள் கொண்டது. சிற்சிலரே அதனை முழுதும் பயன்படுத்த முடிகிறது. ப்ரஹஸ்பதியின் குருவருளும் நம் ஆசான்களாக விளங்கும் ஆசாரியார்கள் அருளும் நமக்கிருந்தால் இந்த எண் மூன்றின் பலனை நாம் பரிபூரணமாகப் பயன்படுத்த முடியும் என்கிறார்கள் மஹான்கள்.

# 2

# குரு என்பவர் யார்?

குரு என்பவர் ஒரு கிரஹதேவன்; பிரஹஸ்பதி என்றும், வியாழன் என்றும், பொன்னன் என்றும் பல திருநாமங்கள் உடையவர். பிரம்ம தேவனின் மானச புத்திரர்களான நவப்பிரம்மாக்களில் ஒருவரான ஆங்கீரச மகரிஷிக்கும் அவர் மனைவி சிரத்தாதேவி என்பாளுக்கும் ஏழாவது பிள்ளையாய்ப் பூராட நக்ஷத்திரத்தில் பிறந்தவர் (சிலர் ஆங்கீரசர் மனைவி வசுதா என்றும் கூறுகிறார்கள்) குருவின் மனைவிகள் தாரை சங்கினி என இரு தேவியர்கள். குருவின் பிள்ளைகள் பாரத்துவாஜர், யமகண்டன், கசன் என்று மூன்றுபேர்கள் குருவின் சகோதரர் உதத்தியன் என்பான், சகோதரி யோகசித்தி என்பாள்.

குரு கிரஹதேவதைகள் ஒன்பது பேரில் ஐந்தாவது இடத்திலிருக்கிறார். இவர் வியாழக்கிழமையின் தலைவன். தனுசு மற்றும் மீன ராசிகளுக்கு அதிபதி. வடதிசையின் வேந்தன். இவர் சுபக்கிரஹர், தயாள சிந்தை மிக்கவர், மேம்பட்டவர். இந்திரன் சபையிலே உயர்ந்த இடத்தில் அமர்ந்து தேவர்களுக்கெல்லாம் குருவாகத் திகழும் தேவகுரு. இவருடைய அதிதேவதை இந்திரன். பிரத்யதிதேவதை பிரம்மதேவன். குருவின் பார்வையால் தோஷங்கள் அனைத்தும் விலகும் என்பார்கள். குரு பார்த்தால் கோடி நன்மை என்பது இதனால்தான்.

குரு எட்டு குதிரைகள் பூட்டப்பட்ட தங்கரதத்தில் பொன்மய மேனியனாக ஏறிவருபவர். மஞ்சள் நிறப் பட்டாடை அணிந்தவர், முல்லை மலர்களை விரும்பி அணிபவர், பொன்னாபரணங்கள் பூண்டவர், நவமணிகளில் புஷ்பராகம், கனகபுஷ்பராக மணிகளை விரும்பி அணிபவர். கொண்டைக் கடலை (மூக்குக் கடலை)யில் செய்த உணவு வகைகளை விரும்பி உண்பவர்.

வைதீக நவக்கிரஹ அமைப்பு முறைகளில் (நடுவிலுள்ள சூரியனுக்கு) மேற்கேயும், ஆகமப் பிரதிஷ்டை முறையில் நடுவிலுள்ள சூரியனுக்கு வடக்கேயும் ஸ்தாபிக்கப்படுபவர், வருடா வருடம் வரும் குருப்பெயர்ச்சி நாளில் பக்தர்களால் விரும்பிக் கொண்டாடப்படுபவர், ஒரு ராசியில் ஓராண்டு மட்டுமே சஞ்சாரம் புரிபவர்.

## 3

# குரு என்றால் என்ன பொருள்?

குரு என்ற சொல்லுக்கு உயர்ந்த தெய்வத்தன்மை பொருந்திய ஓர் பொருளும் உண்டு. பரப்பிரம்மம் என்பது குணமும் - ரூபமும் இல்லாத ஒரு வஸ்துவாகும். சரி அப்படியானால் அதனை சாதாரண அறிவுள்ள மனிதர்கள் எப்படி அறிந்து தெளிவடைவது? அதற்காகத்தான் அந்த தெய்வமே மனம் இரங்கி இந்த மனிதர்களுக்காக மண்மீது இறங்கி குணங்களும் பற்பல ரூபங்களும் கொண்ட அவதாரங்களாகி அணிவகுத்து நிற்கின்றன. அதன் பிறகும் புரியாத அஞ்ஞானிகள் எவ்வளவோ பேர் இங்கு இருக்கின்றார்களே அவர்களுக்காக இறைவனின் அம்சமாக ஒரு குரு வும் இங்கே வருகிறார். இறைவனின் குண - ரூபங்களை சாதாரண மக்களுக்கு அறிவிப்பதற்காக (குணங்களையும் (கு) ரூபங்களையும் (ரு) அறிவிப்பவரே நல்ல குரு வாகிறார்.) இது மட்டுமல்ல குருவுக்கு இன்னும் பல பொருள்களும் உள்ளன. அவற்றையும் பார்ப்போம்.

குரு என்ற சொல் மிகவும் சிறப்புடைய ஒரு சொல்லாகும். அச்சொல்லால் சுட்டிக் காட்டப்படும் நவக்கிரக குரு மட்டுமல்ல அந்த அம்சமுடைய பல்வேறு தேவர்கள் தேவதைகளும்; ஆசாரிய புருஷர்களும் கூட அவ்வாறு மிகுந்த சிறப்புடையவர்களே ஆவர்.

குரு என்றால் பொதுவாக கனமுடைய என்று பொருள். (இதற்கு எதிர்ச்சொல் லகு என்பதாகும். லகு என்றால் எடையற்ற; லேசான என்று பொருள். இன்று "இலகு ரக விமானம்" என்று கூறுகிறார்கள் அல்லவா?) குரு மிகுந்த கனமுடையவர்தான்! ஆம்! நாம் மஹான்களை பெரியோர்களை மஹாகனம் பொருந்திய என்ற அடைமொழி இட்டு அழைக்கிறோம் அல்லவா? அது இந்த தன்மையினால் தான்.

கு+ரு=குரு என்பதும் ஒரு பகுப்பு முறையாகும். இதில் வரும் கு மற்றும் ரு வுக்கும் பற்பல பொருள்கள் உள்ளன. அவை என்னவென்பதை ஆராய்ந்து பார்த்தாலே குருவின் சிறப்புகள் தெளிவாக நமக்கு தெரியவரும்.

கு என்றால் காரிருள்; ரு என்றால் பேரொளி; இருளை நீக்கி ஒளியேற்றிவைப்பவரே குரு. கு என்றால் அழுக்கு; ரு என்றால் தூய தன்மை; நம் உடல், மனம் மற்றும் ஆன்மாவில் உள்ள அழுக்குகளை நீக்கி அதனைத் தூய்மை செய்பவரே குரு. கு என்றால் அஞ்ஞானம்; ரு என்றால் மெய்ஞானம்; நம் அஞ்ஞானத்தை விரட்டி மெய்ஞானத்தை ஊட்டுபவரே குரு. கு என்றால் குருட்டுத்தன்மை; ரு என்றால் சிறந்த பார்வை; நம் குருடடுத் தனத்தை நீக்கி ஞானப்பார்வை தருபவரே குரு. கு என்றால் உலக மாயை; ரு என்றால் தெய்வக்காட்சி; நம் கண்களை மறைக்கும் உலக மாயைகளை திரைபோல் விலக்கி ஒளிமிகுந்த இறைவனைக் காட்டித் தருபவரே குரு. கு என்றால் குறைகள் உடைய ஜடவாழ்க்கை; ரு என்றால் முக்தி எனும் ஆன்மிக வாழ்க்கை; சம்சாரக் கடலில் மூழ்கித்தத்தளிக்கும் நம்மை மீட்டெடுத்து உயர்ந்த வீடுபேறு எனும் ஆன்மிக வாழ்வில் கரையேற்றும் சிறந்த மாலுமியே குரு. இத்தனை சிறப்புமிக்கவர்களே தேவகுரு மற்றும் குருவின் அம்சமுள்ள நம் தேவர்கள் தேவதைகளும், நமக்கு அமைந்த குரு நாதர்களும் என்பதை அறிந்து அவர்களை வணங்க வேண்டும்.

குரு என்றால் மேலும் பற்பல பொருள்களும் உண்டு. ஞான ஆசிரியன், ஞான ஆசான், பிரகஸ்பதி, வியாழன், உபாத்தியாயன், வாத்யார், புரோகிதன், ஆரியன், பிராமணன், இறைவன், அரசன், தகப்பன், அத்தன், ஆசாரியன், கோமான், சாமி, தலைவன், தீர்த்தன் தேசிகன், அடிகள், பகவன், பட்டாரகன், புங்கவன், பெருமான், கனமானவன், பெரியோன் என்பதெல்லாம் குருவிற்கான பொருள்களே ஆகும்.

# 4

# தேவகுரு வியாழ பகவானும் அசுரகுரு சுக்கிர பகவானும்

**(ஒரு ஒப்பீடு)**

சிவாலயங்களில் கோயில் கொண்டருளும் நவக்கிரஹ தேவதைகள் ஒன்பதின்மரில் பிரதான குருவாக இரண்டு ஆசாரியார்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் ஒருவர் தேவர்களின் குருவாக விளங்கும் **சுரகுரு - வியாழ பகவான்.** மற்றொருவர் அசுரர்களின் குருவாக விளங்கும் **சுக்கிரபகவான்.** இந்த இருவருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றி ஆராய்வதே இப்பகுதி.

## குருபகவான்

இந்த **பிரஹஸ்பதி** என்றழைக்கப்படும் **தேவகுரு வியாழன்** நல்லவற்றைக் காக்க நல்லவர்களான தேவர்களின் பக்கம் நின்று அவர்களின் குருவாகவே விளங்கும் **தெய்வம்,** பிரம்மனின் அம்சம் கொண்டு விளங்குபவர். இவர் **இந்திரலோகத்தில் இந்திரன் இந்திராணியோடு** அமர்ந்து ஆட்சி செய்யும் **இந்திர** சபையில் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் குருவாகத் திகழ்பவர். அதனால் **தேவகுரு** என்றும் **சுரகுரு** (சுரர் என்றாலும் தேவர்தான். அ+சுரர்=அசுரர் என்பது இதற்கு எதிர்ப்பதம்) என்றும் கொண்டாடப்படுகிறார். இவர் வாரத்தில் வியாழக்கிழமை க்கு அதிபதியாக இருப்பதால் **வியாழபகவான்** என்றும் போற்றப்படுகிறார். பொன்னிற மேனியெழில் கொண்டு பொலிவதால் **பொன்னன்** என்றும் புகழப்படுகிறார். அஷ்டதளபத்மம் என்ற எட்டிதழ்த் தாமரை வடிவில் உள்ள சூரிய மண்டல ரதத்தில் நடுவில் வட்ட வடிவமான கணிர்க்கை மத்தியில் இருந்து சூரியன் அருள; சுற்றிலும் உள்ள மற்ற எட்டு இதழ்களில் மற்ற எட்டு கிரக தேவதைகளும் இருந்து ஆட்சி புரிவார்கள். இதில் நம் குருபகவான் வடதிசையில் உள்ள இதழில் இருந்து அருளாட்சி புரிகின்றார். இது வைதீக அமைப்பு முறைப்படியாகும்.

**You’ve Just Finished your Free Sample**

**Enjoyed the preview?**

**Buy: https://store.prowesspub.com**